## 8.48 பணியமைப்பு பேரூராட்சிகள் பொது சுகாதாரப் பணி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி துப்புரவு பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்துதல் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்தல் ஆணை வெளியிடப்பட்டது. திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநிர் வழங்கல் (பேரு.2) துறை

அரசாணை (நிலை) எண்.84 நாள் : 21.05.1998

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.92, ஊரக வளர்ச்சித் துறை நாள் 22.4.93
2. அரசாணை (நிலை) எண்.199, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.8.97.
3. பேரூராட்சிகள் இயக்குநரின் கடித எண்.17671/97 ஆ3 நாள் 11.12.97.

**ஆணை**

இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி பேரூராட்சிகளில் தேவைப்படும் கூடுதல் துப்புரவு பணியாளர்களை மாதத்திற்கு ரூ.900 என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்ய பேரூராட்சிகள் இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடப்பட்டது. துப்புரவு பணியாளர்களை மாதத்திற்கு ரூ.900/– என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்வதற்கு பல்வேறு பணியாளர் அமைப்புகளும் ஆட்சேபம் தெரிவித்து, மேற்சொன்ன அரசாணையை பல்வேறு பணியாளர் அமைப்புகளும் ஆட்சேபம் தெரிவித்து, மேற்சொன்ன அரசாணையை மறு பரிசீலனை செய்ய கேட்டுக் கொண்டுள்ளனர். சில பணியாளர் அமைப்புகள் இந்த அரசாணை அமுலாக்கப்படுவதை ஆட்சேபித்து வழக்குகள் தொடர்ந்துள்ளனர். வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளன.

2. இப்பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் ஏற்கனவே ரூ.2000/– வரை மாத ஊதியமாக பெற்று வருகிறார்கள் என்றும் இவர்களுக்கு தற்போது தொகுப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.900/– என குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது முறையானது அல்லவென்று இவர்கள் ஆட்சேபித்துள்ளதாகவும் பேரூராட்சிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார். நீண்ட நாட்களாக தினக்கூலிகளாக பணிபுரிந்து வரும் இவர்களிடமிருந்து வரப்பெற்ற மனுக்கள் மற்றும் முறையீடுகளை பரிசீலணை செய்ததில் அவர்களது கோரிக்கையில் நியாயம் இருப்பதாகத் ரிவித்து 12–8–97 நாளிட்ட அரசாணை எண்.199க்கு திருத்தங்கள் வெளியிட செயற்குறிப்பு ஒன்றை அவர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. அரசு, பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குமறிப்பினை கவனமாக பரிசீலித்த பின்னர் அதை சில மாற்றங்களுடன் ஏற்றுக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 12–8–97 நளிட்ட அரசாணை (நிலை) எண்.199ல் வெளியிட்ட ஆணைக்கு கீழ்கண்டவாறு திருத்தங்கள் செய்து ஆணையிடுகிறது.

(1) 12.8.97 நாளிட்ட ந.நி.ம.க.வ. துறை, அரசாணை (நிலை) எண்.199, வெளியிடுவதற்கு முன்னர் பேரூராட்சிகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ள துப்புரவுப் பணியாளர் பணியிடங்களில் காலிப் பணியிடங்களுக்கு ஏற்றமுறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்து கொள்ளலாம்.

(2) இறந்த பணியாளர்களின் வாரிசுகளை 12.8.97 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.199 வெளியிடுவதற்கு முன்னர் பேருராட்சிகளில் இருந்த நிரந்தரப் பணியிடங்கள் ஏற்படும் காலிப் பணியிடங்களில் ஏற்றமுறை ஊதிய விகிதத்தில் கருணை அடிப்படையில் நியமனம் செய்து கொள்ளலாம். ஆனால் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் பணியாளர் இறந்தால் அவரது வாரிசுதாரருக்கு தொகுப்பூதியத்தில்தான் கருணை அடிப்படையில் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

(3) 12.8.97 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.199ன்படி புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு கீழ்க்கண்டவாறு தொகுப்பூதியத்தில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(i) பேரூராட்சிகளில் 31.12.96 முடிய 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்துள்ள தினக்கூலி துப்புரவுப் பணியாளர்களை நியமிக்கும் பட்சத்தில் மாதந்தோறும் ரூ.1800 என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்ய வேண்டும். ஓராண்டு முடிந்த பின்னர் இப்பணியாளர்களின் செயலாக்கத்தை மதிப்பீடு செய்து ஏற்றமுறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய பரிசீலிக்கப்படும்.

(ii) பேரூராட்சிகளில் 31.12.96 முடிய ஐந்து ஆண்டு முதல் 10 ஆண்டு வரை பணிபுரிந்துள்ள தினக்கூலி துப்புரவு பணியாளர்களை நியமிக்கும் பட்சத்தில் மாதந்தோறும் ரூ.1500/– என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட வேண்டும். ஓராண்டு முடிந்த பின்னர் இப்பணியாளர்களின் செயலாக்கத்தை மதிப்பீடு செய்து ஏற்றமுறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய பரிசீலிக்கப்படும்.

(iii) 31.12.96 அன்று 5 ஆண்டும் அதற்குக் குறைவாகவும் பணிபுரிந்த தினக்கூலிப் பணியாளர்களுக்கு ரூ.1200 மாதாந்திர தொகுப்பூதியமாக ஒன்றரை வருடத்திற்கு வழங்கப்பட்டு பின்னர் அவர்களது பணியாக்கத்தினை மதிப்பீடு செய்து அவர்களை எற்றமுறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய பரிசீலனை செய்யப்படும்.

(iv) 1.1.97க்கு பின்னர் பேரூராட்சிகளில் பணியில் சேர்ந்தவர்களுக்கு மாதம் ரு.900/– தொகுப்பூதியம் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கலாம். இத்தொகுப்பூதியம் ஒவ்வொரு ஆண்டும் 10 சதவிகிதம் கூடுதலாக்கப்படும். முதலாமாண்டு ரூ.900/– இரண்டாமாண்டு ரு.990/– மூன்றாமாண்டு ரு.1089/– மூன்று ஆண்டுகளுக்குப்பின்னர் இவர்களது செயலாக்கத்தை மதிப்பீடு செய்து ஏற்றமுறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய பரிசீலிக்கப்படும்.

4) அனைத்து பேரூராட்சிகளிலும் 12.8.97 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (நிலை) எண்.199ன்படி புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கும் மேலே பத்தி 3(3)ல் குறிப்பிட்டுள்ளவாறு தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட வேண்டும்.

5. இந்த அரசாணை 12.8.97 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.199ல் வெளியிட்ட ஆணையை ஆமல்படத்துவதை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்தவர்களுக்கு அவர்கள் தொடர்ந்த வழக்கின் முடிவு தெரியும்வரை அமுல்படுத்த இயலாது. எனவே இந்த ஆணை நீதி மன்றங்களில் வழக்கு தொடர்ந்தவர்களுக்கு பொருந்தாது.

6. மேலே பத்தி 3(3)ல் திருத்தியமைக்கப்பட்ட தொகுப்பூதியம் 1.5.98 முதல் அமுலுக்கு வரும். ஆனால் இந்த துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் அவர்கள் முறையாக தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து கணக்கிடப்படும்.

7. இந்த அரசாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அதன் அ.சா.கு.எண்.6292/FS/97, நாள் 02–4–98 படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**
அரசு செயலர்.